## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

## M.C.O.P No. 8/2023

**2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு. இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராணி | த.பெ | |
| கிராமம் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல்விசாரணை:-**

நான் இந்த மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கைரேகையிட்டேன். அதனை ஏற்றுக்கொண்டு மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன். 20.11.2022ம் தேதிய முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.11.2022ம் தேதிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் நீதிமன்ற சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 05.01.2023ம் தேதிய எம்.வி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.12.2022 முதல் 21.12.2022ம் தேதிய மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.12.2022ம் தேதிய இறந்துபோன கோபால் என்பவரின் இறப்பச் சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.01.2023ம் தேதிய இறந்துபோன கோபால் என்பவரின் வாரிசுச் சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன கோபால் என்பவரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2005-2009 குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன கோபாலுக்கு அரசு வழங்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் சட்டம் தனிநபர் வேலைக்கான இலவச அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி. அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீடு அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த

14.10.2010ம் தேதிய இறந்துபோன கோபால் என்பவரது வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்து **ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகின்றது.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**